**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(03.09.2022 முதல் 07.09.2022 )**

**அறிக்கை எண் 070/2022**

**தேதி.02.09.2022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (30.08.2022 முதல் 01..09.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 07.09.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 30/08 | 31/08 | 01/09 | தேதி | நாள்-1 03/09 | நாள்-2 04/09 | நாள்-3 05/09 | நாள்-4 06/09 | நாள்-5 07/09 |
| 12.4 | 13.5 | 16.3 | மழை (மி.மீ) | 25 | 15 | 22 | 25 | 28 |
| 33 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 31 | 31 | 30 |
| 23 | 25 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 22 | 22 | 21 |
| 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| 91 | 89 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 65 | 67 | 95 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 3 | 11 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 8 | 10 | 10 |
| 90 | 90 | 320 | காற்றுவீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (03.092022 முதல் 07.09.2022)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சி வடக்கு | பொள்ளாச்சி தெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 03-09-2022 | 29 | 32 | 29 | 31 | 31 | 30 | 30 | 30 | 31 | 34 | 33 | 30 |
| 04-09-2022 | 22 | 32 | 30 | 28 | 28 | 30 | 25 | 25 | 30 | 32 | 31 | 28 |
| 05-09-2022 | 41 | 67 | 66 | 60 | 67 | 69 | 49 | 49 | 69 | 65 | 69 | 64 |
| 06-09-2022 | 52 | 74 | 81 | 72 | 82 | 84 | 59 | 59 | 83 | 69 | 78 | 79 |
| 07-09-2022 | 36 | 61 | 63 | 52 | 58 | 61 | 43 | 43 | 61 | 57 | 60 | 56 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்களுக்கு மிதமான மழையுடன் காற்றின் வேகம் **8 – 10** கி.மீ வரை எதிர் பார்க்கப்படுபிறது.<br>மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் கனமழை எதிர் பார்க்கப்படுவதால் நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இந்தப்பகுதியில் இருப்போர் கால்நடைகளை கவனமாக பார்த்துக்கொள்ளுமாறு அறிவுருத்தப்படுகிறார்கள். |
| நெல் | வளர் மற்றும் பூக்கும் பருவம் | பூக்கும் பருவத்தை அடைந்த குறுவை நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு **30** கிலோ யூரியா மற்றும் **10** கிலோ மியூரேட் பொட்டாஷ் உரத்தை மேலுரமாக இடவேண்டும். மேலுரம் இடப்பட்ட வயலில் நீர் வடிக்க வேண்டாம்.<br>எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி சம்பா நடவிற்கு நாற்றாங்கால் தயார் செய்யவும்.<br>மழை பெற வாய்ப்புள்ளதால் கார் பருவத்தில் நடவு செய்த நெற்பயிர்கள் பால் பிடிக்கும் தருணம் முதல் அறுவடை தருணத்தில் உள்ளதால், தகுந்த வடிகால் வசதி செய்யவும். |
| தக்காளி | நடவு | நிலவும் சதாகமான வானிலையில் தக்காளியில் இலைகோட்டுப்பூச்சியினை கட்டுப்படுத்த **5** சத வேப்பங்கொட்டை சாற்று கரைசலை மழையில்லா நேரங்களில் தெளிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | விதைப்பு மற்றும் வளர் பருவம் | மழை எதிர்பார்க்கப்படுவதால் மஞ்சளில் தக்க வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். மேலும் மண்ணின் அதிக ஈரப்பதம் மற்றும் மேக மூட்டத்தின் காரணமாக மஞ்சளில் கிழங்கு அழுகல் நோய் வரவாய்ப்புள்ளதால் 1 சத போர்டாக்ஸ் கரைசல் (அ) 0.25 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு கரைசலை தூரில் ஊற்றுவதன் மூலம் நோய் பரவாமல் தடுக்கலாம். |
| கரும்பு | | காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் முன்பட்ட மற்றும் நடுபட்டங்களில் பயிரிடப்பட்ட கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கட்ட வேண்டும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி மீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும்.<br>ஓணம் பண்டிகைக்கான பழங்கள் அறுவடை செய்யப்பட்ட பின் வாழை மரங்களை தாருடன் வெட்டி சாய்த்து துண்டுகளாக்கி இயற்கை உரமாக்க வேண்டும். |
| கால்நடைகள் | | மாடுகளை குளக்கரைகளில் புதிதாக முளைத்த தாவரங்களை மேய்சலுக்கு விட வேண்டாம். இதனால் வரக்கூடிய துள்ளுமாறி நோயைத் தவிர்க்கலாம்.<br>காற்றின் வேகம் மற்றும் மேகமூட்டம் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியினை போக்க தேவையான அளவு குடிநீர் கொடுக்கவும்.<br>நிலவும் வானிலை கோமாரி நோய் (கால் மற்றும் வாய்ச்சப்பை நோய் ) தாக்குதலுக்கு ஏற்றதாக காணப்படுவதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு அறிவுருத்தப்படுகிறார்கள். |

## குறுஞ்செய்தி

- காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் முன்பட்ட மற்றும் நடுபட்டங்களில் பயிரிடப்பட்ட கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கட்ட வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**